**100% வாக்களிக்க உறுதி செய்வோம்!**
**ENSURE 100% VOTING!**

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**தேர்தல் செய்தி வெளியீடு**

**செ.வெ. எண். 04** **நாள். 14.03.2019**

**சந்தேகத்திற்கிடமான வகையில் ஏதேனும் வங்கிக் கணக்கில் இருந்து ரூ.1 இலட்சத்திற்கு மேல் பணம் பரிவர்த்தனை செய்யப்பட்டல் மாவட்ட தேர்தல் அலுவலருக்கும், ரூ.10 இலட்சத்திற்கும் மேல் பணப்பரிவர்த்தனை செய்பவர்களின் பெயர் விவரங்களை வருமானவரித் துறைக்கும் தெரிவிக்க வேண்டும் !**

**ஏ.டி.எம்.களில் பணம் வைக்க செல்லும் வங்கியாளர்கள் அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் வைத்திருக்க வேண்டும் !!**

**வங்கியாளர்களுடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர் / ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தகவல் !!!**

= = = =

சென்னை மாவட்டத்தில் வங்கி பணப் பரிவர்த்தனைகளை கண்காணிப்பது குறித்தும், தேர்தல் நன்னடத்தை விதிமுறைகளை செயல்படுத்துவது குறித்தும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் வங்கி அலுவலர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் 13.03.2019 அன்று ரிப்பன் மாளிகையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது: ரொக்க பணத்தை எடுத்து செல்வதற்காக அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கும் ஏஜென்சிகள் – நிறுவனங்களின் வேன்கள், அங்கீகாரம் இல்லாத ஏஜென்சியின்–3ம் நபரின் பணத்தையோ, தனிநபர்களின் பணத்தையோ எடுத்து செல்லாமல் இருக்க வேண்டும். தேர்தல் நேரத்தில் தேர்தல் கமிஷனின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் (மாவட்ட தேர்தல் அதிகாரி அல்லது இதர அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி) ஏஜென்சி–நிறுவனத்தின் ரொக்கம் கொண்டு செல்லும் வேனை தடுத்து நிறுத்தி சோதனை செய்ய நேரிடும். அதற்காகவே, இந்த நடைமுறையை பின்பற்றிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தில் உள்ள வங்கிகளில் வங்கி சேமிப்பு கணக்கில் இருந்து வழக்கத்திற்கு மாறாகவோ அல்லது சந்தேகப்படும்படி 2 மாதங்களில் ரூ.10 இலட்சத்திற்கும் மேல் பணப்பரிவர்த்தனை செய்பவர்களின் பெயர் விவரங்களை **மாவட்ட தேர்தல் அலுவலகம் மற்றும் வருமான வரித்துறை அலுவலகத்தில் உள்ள துணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் ஆகியோருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.** முகவர்கள், நிறுவனங்கள் ஆகியவை வங்கிகளில் இருந்து பணம் எடுத்து செல்லும் போது அதற்குரிய ஆவணங்களை வைத்திருக்க

வேண்டும். ஏ.டி.எம். இயந்திரங்களில் பணம் வைக்க வாகனங்களில் செல்லும்போதோ அல்லது ஒரு கிளையில் இருந்து வேறொரு கிளைக்கு பணம் வாகனங்களில் எடுத்து செல்லும்போதோ வாகனத்தில் இருப்பவர்கள் அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் வைத்திருக்க வேண்டும்.

பல நபர்களுக்கு R.T.G.S. சந்தேகத்திற்கிடமான முறையில் ஒரு சேமிப்பு கணக்கில் இருந்து பண பரிமாற்றம் நடைபெற்றால், அதுதொடர்பான விவரங்களை மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். கடந்த இரண்டு மாத காலத்தில் வழக்கத்திற்கு மாறாகவும், சந்தேகத்திற்கிடமான வகையிலும் ஏதேனும் வங்கிக் கணக்கிலிருந்தோ அல்லது வேட்பாளர் வங்கி கணக்கிலிருந்தோ அல்லது அவரை சார்ந்தவர்களது வங்கி கணக்கிலிருந்தோ அல்லது அரசியல் கட்சி வங்கிக் கணக்கிலிருந்தோ ரூ.1 இலட்சத்திற்கும் மேல் பணம் பரிவர்த்தனை செய்யப்பட்டால் அதை உடனடியாக மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

மாவட்டத்தின் முன்னோடி வங்கி அலுவலர் நாள்தோறும் அனைத்து தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகளின் தினசரி பணப்பரிவர்த்தனை விவரங்களை பெற்று தேர்தல் செலவு கண்காணிப்பு குழுவிற்கு தகவல் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு பேசினார்.

இக்கூட்டத்தில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (வ (ம) நி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.எம்.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., தேர்தல் நடத்தும் அலுவலர்கள்/வட்டார துணை ஆணையாளர்கள் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஷ், இ.ஆ.ப., மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், தனியார் வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**